(ஆ) குறுகிய கால வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறுகிய கால வினா எண் 2, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

2—

மருத்துவர்கள்

9424—திரு. ஐ. கணேசன்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு வட்ட மருத்துவமனைக்கு அன்றாடம் சிகிச்சைக்கு வரும் வெளி நோயாளிகளின் எண்ணிக்கை சராசரியாக எவ்வளவு?

(ஆ) அவ்வாறு சிகிச்சைக்கு வரும் வெளி நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப அங்கு அரசு மருத்துவர்கள் இல்லை என்பதை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், வட்ட மருத்துவமனைக்கு தகுதிக்கேற்ப மருத்துவர்களை நியமிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு வட்ட மருத்துவமனைக்கு சராசரியாக நாளொன்றுக்கு 652 வெளி நோயாளிகள் வந்து சிகிச்சைப் பெறுகின்றனர்.

(ஆ) சிகிச்சைக்கு வரும் வெளி நோயாளிகளின் எண்ணிக்கைக்கேற்ப அரசு மருத்துவர்கள் அந்த மருத்துவமனையிலே பணியாற்றுகின்றனர்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அமைச்சர் அவர்கள் பதில்சொல்லும்போது, 652 பேர் வருகிறதாகக் குறிப்பிட்டார்கள். நான் நேற்று அந்த மருத்துவமனைக்குச் சென்றிருந்தேன். சராசரியாக 662 பேருக்கு மேல் வருவதாகவும் அவசர சிகிச்சைப் பிரிவிற்கு 125 பேர் மாதம் ஒன்றுக்கு வருவதாகவும், இரத்தப் பரிசோதனைக்கு

2001 செப்டம்பர் 10]

மட்டும் 1,080 பேர் நாள் ஒன்றுக்கு வருவதாகவும் அங்கே கணக்கிலே சொல்லப்பட்டிருக்கிறது. 1939 ஆம் ஆண்டு மருந்தகமாகத் தொடங்கப்பட்டது. 1-11-1972-ல் அரசு மருத்துவமனையாக மாற்றப்பட்டது. அந்த தாலுக்கா மருத்துவமனைக்கு போதுமான டாக்டர்கள் இல்லை என்பதை மட்டும் மாமன்றத்தின் மூலமாக அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இவ்வளவு நோயாளிகளுக்குப் போதுமான டாக்டர்களை நியமிக்க வேண்டும். அதேபோல் பெண் டாக்டர்களை உடனடியாக நியமிக்க இந்த அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்ன கணக்கு சராசரி கணக்குத்தான். எனவே, நோயாளிகளின் எண்ணிக்கை நாள் ஒன்றுக்கு கூடுதலாகவும், குறைவாகவும் இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கணக்கு சரியாகக் கூட இருக்கலாம். எனவே, இன்றைக்கு அந்த மருத்துவமனைக்கு வருகிற நோயாளிகளின் கணக்கை வைத்துதான் டாக்டர்கள் நியமனம், செவிலியர்கள் நியமனம் எல்லாம் செய்யப்படுகிறது. அப்படிக் கூடுதலாக நோயாளிகள் சிகிச்சைக்கு வரும் பட்சத்தில் நிச்சயமாக அதற்கேற்ப, விகிதாச்சாரத்திற்கேற்ப, டாக்டர்கள், செவிலியர்கள் நியமிக்கப்பட வேண்டும். அதேபோல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல 1972 ஆம் ஆண்டிலே நகராட்சி மருந்தகமாக இருந்த இந்த மருந்தகம், எடப்பாடி தாலுக்காவாக மாற்றப்பட்டவுடன், தாலுக்கா மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டது. அந்தவகையில்தான் அங்கே இப்பொழுது Lab Technician, Radiographer போன்ற பணியிடங்கள் எல்லாம் உருவாக்கப்பட்டு அந்தப் பணியிடங்கள் நிரப்பப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல இன்னும் அந்த மருத்துவமனை விரிவாக்கம் செய்யப்படவேண்டும் என்று சொன்னால், நிச்சயமாக நோயாளிகளின் வருகைக்கேற்பவும், நிதி வசதிக்கேற்பவும் அந்த மருத்துவமனை தரம் உயர்த்தப்படும்.

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3-10-1939 அன்று ஆங்கிலேயர்கள் ஆட்சிக் காலத்திலே தொடங்கப்பட்ட மருந்தகம் அது. நகராட்சி மருந்தகமாக 1-11-1972-ல் தொடங்கப்பட்டது. அங்கு வரக்கூடிய நோயாளிகளுக்குப் போதுமான டாக்டர்கள் இல்லை

[2001 செப்டம்பர் 10

என்பதை இந்த அரசு ஒத்துக்கொண்டிருக்கிறது. அதற்காக நன்றி. Season காலத்திலே மிகச் சிரமம். 1,000, 1,200 பேருக்கு மேலே வருகிறார்கள். T.B. சிகிச்சைக்கு மிக அதிகமாக வருகிறார்கள். அவர்களுக்கெல்லாம் தனிப் பிரிவு கட்ட வேண்டும். 1939 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அதே மருந்தகத்தில்தான் இப்போது வெளி நோயாளிகளுக்கு சீட்டு கொடுக்கும் இடம், சிகிச்சைப் பிரிவு, சித்தா பிரிவு, கட்டு கட்டும் இடம், பெண்களுக்கு புண் ஏற்படும்போது கட்டு கட்டும் இடம் அனைத்தும் அந்தச் சிறிய இடத்திலேயே இருப்பதினால், போதுமான இடமும் இல்லை. மருத்துவர்களும் அங்கே இல்லை. இதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, ஒரு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, அந்த மருத்துவமனையிலே பெண் டாக்டர் இல்லை என்பதை அரசு உணர்ந்திருக்கிறது. நான் சென்ற வாரம் பதில் சொல்கிறபோது, அந்த மருத்துவமனைக்குப் பெண் டாக்டர்கள் விரைவிலே நியமனம் செய்யப்படுவார்கள் என்று சொன்னேன். அடுத்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே தனிப் பிரிவுகள் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள், அந்த மருத்துவமனையிலே தனிப் பிரிவுகளுக்கான வசதிகள் இல்லை என்று சொல்கிறார்கள். அந்த மருத்துவமனையைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அங்கே அந்த மருத்துவமனை வளாகத்தில் கிட்டத்தட்ட 37 பேர் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள். அதிலே 13 பேர் சங்ககிரி சிவில் நீதிமன்றத்திலே வழக்கு தொடர்ந்து அந்த வழக்கு நிலுவையிலே இருக்கிறது. அதிலே ஒரு நபர் தடையாணையும் பெற்றிருக்கிறார். எனவே, மருத்துவத் துறையைப் பொறுத்தவரையில் அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு வருவாய்த் துறையினுடைய உதவியை நாடியிருக்கிறது. வருவாய்த் துறையும் வழக்கு நிலுவையிலே இருப்பதினாலே தங்களாலே செய்ய முடியவில்லை என்று தங்களுடைய இயலாமையைச் சொல்லியிருக்கிறார்கள். ஆக்கிரமிப்பை அகற்றுவதற்காக இன்னும் கூடுதலாக, 10,000 ரூபாயை மருத்துவத் துறைச் செலுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். எனவே அதுகுறித்தும் இந்தத் துறை பரிசீலித்து வருகிறது.

2001 செப்டம்பர் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஐ. கணேசன், மறுபடியும் கேட்க வேண்டுமா?

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடப்பாடியிலே இது மிக முக்கியமான பிரச்சினை. அரசு மருத்துவமனை வளாகத்திலே ஆக்கிரமிப்பு இருப்பது உண்மை. அதை அகற்ற வேண்டிய பொறுப்பு அரசிடம் உள்ளது. தாலுக்கா மருத்துவமனையாக அந்த மருத்துவமனையின் அந்தஸ்தை உயர்த்தியபோது அந்த இடங்களிலே உள்ளவர்களைக் காலி செய்ய வேண்டுமென்று அங்கு ஆக்கிரமிப்பு செய்தவர்கள் அனைவரையும் அழைத்துக் கேட்டிருந்தோம். மாற்று இடம் கொடுத்தால் ஆக்கிரமிப்பை அகற்றி விடுகிறோம் என்று அவர்கள் சொல்லியிருந்தார்கள். அதை தாலுக்கா அலுவலகத்திலும் சொல்லியிருக்கிறோம். அவர்களுக்கு ஏதாவது ஒரு இடத்திலே மாற்று இடத்தைக் கொடுத்து விட்டு, மருத்துவமனைக்குச் சொந்தமான இடத்தை அரசு உடனடியாக தன் வசம் கொண்டு வர நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய முயற்சிக்கு அரசும் ஒத்துழைக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறுகிய கால வினா எண் 3, திரு. சி. சிவசாமி, மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்.

3—

விட்டு மனைகள்

9244—திரு. சி. சிவசாமி:

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் ஒன்றியம், முதலிப்பாளையம் ஊராட்சி, மானூர் கிராமம் அருகில் வீட்டுவசதி வாரியம் மூலமாக வீடு கட்டுவதற்கு நிலம் கையகப்படுத்தி மனைகள் சீர் செய்த பின்னர் மனைகள் விலை அதிகமாக உள்ளதால், விற்கப்படாமல் உள்ளதை விலை குறைத்து விற்க அரசு முன்வருமா?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS